செ.வெ.எண் :231/2020 நாள் : 17.06.2020

**காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூர் வட்டம் மற்றும் மாங்காடு சிறப்பு நிலை பேரூராட்சி நுழைவாயில் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள சிறப்பு சோதனைச் சாவடிகளை காஞ்சிபுரம் மாவட்ட சிறப்பு கண்காணிப்பாளர் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் செயலர் முனைவர்.இல.சுப்பிரமணியன் இ.ஆ.ப., அவர்கள் மற்றும் தமிழ்நாடு கடலோர காவல்படை காவல்துறை துணை தலைவர் திருமதி.பவானீஸ்வரி இ.கா.ப., அவர்கள் தலைமையில் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா .பொன்னையா இ.ஆ.ப., முன்னணியில் இன்று (17.06.2020) ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய் தொற்று பரவாமல் தடுக்கும் பொருட்டு முன்னெச்சரிக்கை மற்றும் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் குற்றவியல் நடைமுறைச் சட்டம் 1974 பிரிவு 144 இன் கீழ் 24.03.2020 முதல் நடைமுறையில் உள்ள ஊரடங்கு உத்தரவு சில தளர்வுகளுடன் தொடர்ந்து நீட்டிக்கப்பட்டு வந்த நிலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கொரோனா வைரஸ் தொற்றைத் தடுப்பதற்காக மாநில பேரிடர் மேலாண்மை சட்டத்தின் கீழும், மத்திய உள்துறை அமைச்சகத்தின் அறிக்கையின் அடிப்படையிலும் தற்போது ஊரடங்கு உத்தரவு வரும் 30.06.2020 நள்ளிரவு 12 மணி வரை ஏற்கனவே நடைமுறையில் உள்ள பல்வேறு கட்டுப்பாடுகளுடன் மக்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு சில தளர்வுகளுடன் நீட்டிப்பு செய்யப்படுகிறது என உத்தரவிட்டதை தொடர்ந்து 01.6.2020 திங்கள் கிழமை முதல் 30.06.220 செவ்வாய்க்கிழமை நள்ளிரவு 12 மணிவரை மேலும் 30 நாட்களுக்கு காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஊரடங்கு நீட்டிக்கப்பட்டு உத்தரவிடப்பட்டு இருந்தது.

இந்நிலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிக்கையை செ.கு.எண்.90 -இன் படி சென்னை மற்றும் அதன் அருகில் உள்ள மாவட்டங்களில் பெருநகர சென்னை காவல் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் பரவலை கருத்தில்கொண்டு 19.06.2020 அதிகாலை முதல் 30.6.2020 இரவு வரை 12 நாட்களுக்கு முழு ஊரடங்கு அமல்படுத்தப்பட்டு உள்ளது அதன்படி காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள பெருநகர சென்னை காவல் எல்லைக்குட்பட்ட பகுதிகளான மாங்காடு பேரூராட்சி, குன்றத்தூர் பேரூராட்சி மற்றும் குன்றத்தூர் ஊராட்சிக்கு உட்பட்ட ஐயப்பன்தாங்கல், பரணிபுத்தூர், செம்பாக்கம், கொளப்பாக்கம், கோவூர், தண்டலம், தரப்பாக்கம், இரண்டாம் கட்டளை, மௌலிவாக்கம், பெரியபரணிச்சேரி, நந்தம்பாக்கம், சிறுகளத்தூர், கொல்லச்சேரி, கொழுமணிவாக்கம், சிக்கராயபுரம், பூந்தண்டலம், மலையம்பாக்கம், திருமுடிவாக்கம் ஆகிய 18 ஊராட்சிகள் பெருநகர சென்னை காவல் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வருகின்றது எனவே இப்பகுதிகளில் நோய்த்தடுப்பு பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில் பெருநகர சென்னை காவல் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நோய் தடுப்பு பணிகள் மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளில் செயல்பாடுகள் குறித்து காஞ்சிபுரம் மாவட்ட சிறப்பு கண்காணிப்பாளர்கள் ஆன தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் செயலர் முனைவர்.இல.சுப்பிரமணியன் இ.ஆ.ப., அவர்கள் மற்றும் தமிழ்நாடு கடலோர காவல்படை காவல்துறை துணை தலைவர் திருமதி.பவானீஸ்வரி இ.கா.ப., ஆகியோர் தலைமையில் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப. அவர்கள் முன்னணியில் குன்றத்தூர் மற்றும் மாங்காடு சிறப்புநிலை பேரூராட்சி எல்லைப் பகுதிகளான திருமுடிவாக்கம், மலையம்பாக்கம், குன்றத்தூர், மூன்றாம் கட்டளை, மௌலிவாக்கம், மதனந்தபுரம் மற்றும் ஐயப்பன்தாங்கல் தில்லை அகரம் நுழைவாயில் ( சோதனை சாவடி) பகுதிகளில் நான்கு சக்கரம் மற்றும் இருசக்கர வாகனங்களில் பயணம் செய்பவர்கள் முன் அனுமதி இணையதளத்தில் இ பாஸ் பெற்றுள்ளனரா என்றும் இ பாஸ் பெறாதவர்களை கண்காணிப்பாளர்கள் திருப்பி அனுப்பப்பட்டு வருவதையும் காஞ்சிபுரம் மாவட்ட சிறப்பு கண்காணிப்பாளர் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் செயலர் முனைவர்.இல.சுப்பிரமணியன் இ.ஆ.ப., அவர்கள் மற்றும் தமிழ்நாடு கடலோர காவல்படை காவல்துறை துணை தலைவர் திருமதி.பவானீஸ்வரி இ.கா.ப., அவர்கள் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா .பொன்னையா இ.ஆ.ப., ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். மேலும் குன்றத்தூர் சிறப்புநிலை பேரூராட்சி அலுவலகத்தில் காஞ்சிபுரம் மாவட்டத்தின் கொரோனா வைரஸ் நோய் பரவாமல் தடுத்திட செய்யப்பட வேண்டிய தடுப்பு நடவடிக்கைகள் குறித்து அனைத்து துறை அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் ஸ்ரீபெரும்புதூர் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.திவ்யஸ்ரீ, ஸ்ரீபெரும்புதூர் சிப்காட் தனித்துணை ஆட்சியர் திருமதி. செல்வமதி, துணை இயக்குனர் சுகாதாரப்பணிகள் மரு.பழனி உதவி இயக்குனர் (பேரூராட்சி) திரு.மனோகரன், குன்றத்தூர் காவல் உதவி ஆணையர் திரு.சம்பத், வருவாய் வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி அலுவலர், பேரூராட்சி செயல் அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் சுகாதார துறை பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு – செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,காஞ்சிபுரம்.**